# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 27 வியாழக்கிழமை 23.12.2024 கதிர் 77




## மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

# கிளிநொச்சியிலும் அமளி-துமளி!

[கிளிநொச்சி, டிச. 26]

**யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைப் போலவே, கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் அமளி – துமளிகளின் மத்தியில், ஆக்கபூர்வ–மான முடிவுகள் எதுவும் எடுக்க முடியாத அளவுக்குப் பெரும் குழப்ப நிலை காணப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று வியாழக கிழமை காலை, கடற்றொழில் நீரியல் வள அமைச்சரும், யாழ் - கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், யாழ்- கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், க.இளங்குமரன், ஜே.ரஜிவன், மருத்துவர் எஸ்.சிறிபவானந்த ராஜா, மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா, பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், வடக்கு

7➤



# மீண்டும் எலிக்காய்ச்சல்?

யாழ்ப்பாணம், டிச. 26

கடந்த மாதம் ஏற்பட்ட கடும் மழை மற்றும் வெள்ளப் பெருக்கின் காரணமாக யாழ்ப்பாணத்தை பாதித்திருந்த எலிக் காய்ச்சல் மீண்டும் அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் உட்பட வடபகுதியை அச்சுறுத்திய எலிக்காய்ச்சல் காரணமாக ஒன்பது பேர் உயிரிழந்ததுடன், 234 பேர் இந் நோய்க்கான சிகிச்சைகளைப் பெற்றிருந்தனர். கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாகப் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்த சுகாதார அதிகாரிகளின் கடும் முயற்சியின் பின்னர் நோய்ப் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்தது. காய்சலால் பீடிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்திருந்தது.

தற்போது, மீண்டும் ஒரே நாளில் எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நான்கு நோயாளிகள் யாழ்.போதனா வைத்திய சாலையிலும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதை அடுத்து மீண்டும் எலிக்காய்ச்சல் பரவல் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது எனச் சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (ஐ)

## பொலிஸ் திணைக்கள இடமாற்றம் ஆறு மாதங்களுக்கு இடைநிறுத்தம்!

(கொழும்பு, டிச. 26)

பொலிஸ் திணைக்களத்தின் வருடாந்த இடமாற்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவது ஆறு மாதங்களுக்கு இடை நிறுத்தப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய இது தொடர்பான உத்தரவை கடந்த செவ்வாய்க் கிழமை பிறப்பித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இதன்படி, எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி நடைமுறைப்படுத்தப்படவிருந்த 2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்ற

உத்தரவுகளை அமுல்படுத்தும் திகதி அவ்வருடம் ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வருடாந்த இடமாற்ற உத்தரவு-

7➤



2004 ஆம் ஆண்டு மார்கழி மாதக் கடைசி வாரத்தில் உலகை உலுக்கிய சுனாமி - ஆழிப் பேரலை அனர்த்தத்தின் 20 ஆவது ஆண்டு நினைவு நாள் இன்றாகும். இதனையொட்டி யாழ்ப்பாணம் - உடுத்துறையில் அமைந்துள்ள சுனாமிப் பொது நினைவாலயத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தாயொருவர் கண்ணீர் மல்கக் கசிந்துருகும் காட்சி இது. மேலதிக படங்கள் 8 ஆம் பக்கத்தில். (படம் : யாழ். தீபன்)

# இராணுவ நினைவுச் சின்னத்தை அகற்றுமாறு சிறிதரன் கோரிக்கை!

(கிளிநொச்சி, டிச. 26)

கிளிநொச்சி டிப்போ சந்தியில் அமைகக்கப்பட்டுள்ள இராணுவ நினைவுச் சின்னம் அகற்றப்பட்டு, கலாச்சார மண்டபம் அமைக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி டிப்போ சந்தியில் ஒரு இராணுவ நினனைவுச்சின்னம் உள்ளது. டிப்போவுக்குப் பின்னால் இரண்டு ஏக்கர் காணி இராணுவத்தின் வசமுள்ளது.

தற்போது பேருந்து நிலையம் அமைந்துள்ள பகுதியில் முன்னாள் அமைச்சர் பெரியசாமி சந்திரசேகரனால் மிகப்பெரிய கலாச்சார மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. அதனை இராணுவம் தான் இடித்து அழித்தது.

7➤

## ருஹுணு பல்கலைக்கழகத்தின்

# முன்னாள் துணைவேந்தர் நீக்கத்துக்கெதிராக உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு!

கொழும்பு, டிச. 26

ருஹுணு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்பேராசிரியர்சுஜீவ அமரசேன துணைவேந்தர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, அவரது இடத்துக்குத் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவரை நியமித்ததன் மூலம் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக பேராசிரியர் சுஜீவ அமரசேன கல்வி அமைச்சரும், பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

ரு/ஹுண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியில் இருந்து தான் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவில், அரசியல் நோக்கம் கருதியே தான் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

துணைவேந்தர் பதவிக்குத் தகுதி வாய்ந்த அதிகாரியை நியமிப்பதிலும் நடைமுறை மீறப்பட்டுள்ளதாகவும், இது ஒரு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்றும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கல்வி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய, உயர்கல்வி அமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, ஆணைக்குழுவின் தலைவர், அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆகியோர் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும்" எனவும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-05)

## வவுனியா விபத்தில் இளைஞன் பலி

(வவுனியா, டிச. 26)

வவுனியா கோவில் குளம் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இந்தச்சம்பவம்தொடர்பில் தெரியவருவது, நேற்று புதனகிழமை இரவு இளைஞரொருவர் மோட்டார் சைக்கிலில் சென்று கொண்டிருந்த வேளையில், வவுனியா கோவில்குளம் பகுதியில் மோட்டார்சைக்கிள் கட்டுபாட்டை இழந்து வீதியின் கரையில் இருந்த மின்சாரகம்பத்துடன்மோதிவிபத்திற்குள்ளாகியது.

விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற இளைஞர் பலத்த காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்துள்ளார், மற்றயவர் காயமடைந்துள்ளார். சம்பவத்தில்யாழ்அராலியைச் சேர்ந்த ப.சஞ்சயன் என்ற 22 வயதான இளைஞரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## கொள்ளுப்பிட்டியில் கோர விபத்து

கொழும்பு, டிச. 26

கொழும்பு கொள்ளுப்பிட்டிபகுதியில்இடம்பெற்ற மோட்டார்சைக்கில் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தனியார் பேருந்து ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்தவர் பேருந்து சில்லுகளுக்கிடையில் நசுங்கி உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்து இன்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவரின் தலை பேருந்தின் பின் சக்கரத்தினால் முற்றாக நசுங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

கதிர்காமத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்துடனையே மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது. ஐ)

## இரண்டு மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை இலங்கைச் சுற்றுலாத்துறை வரலாற்றுச் சாதனை!






(கொழும்பு, டிச. 26)

இலங்கைக்கு வருகை தந்த இருபது இலட்சமாவது சுற்றுலாப் பயணிகளுக்கு விமான நிலையத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் இருந்து வந்த ஒரு தம்பதியினரின் வருகையைத் தொடர்ந்து இலங்கையின் இரண்டு மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை இலங்கை இன்று பதிவு செய்துள்ளதாக இலங்கை சுற்றுலாத்துறை தெரிவித்துள்ளது.

அதனைக் கொண்டாடும் வகையில் தாய்லாந்தில் இருந்து வந்த ஒரு தம்பதியினரின் வருகை விமான நிலையத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. 2024 ஜனவரி முதல் டிசம்பர் 22 வரை மொத்தம் 1,966,256 சுற்றுலாப் பய ணிகள் வந்துள்ளதாக இலங்கை சுற்றுலாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2024 டிசம்பர் 01 முதல் 22 வரை மொத்தம் 161,383 சுற்றுலாப் பயணிகள் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளது, இந்தியாவிலிருந்து 35,131 பேர் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளாக வந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலாத்துறைத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ஐ)

## நடமாடும் நெல் களஞ்சியசாலைகள் மாயம்!



கொழும்பு, டிச. 26

இஸ்ரேலில் இருந்து நெல் கொள்வனவுக்காக கொண்டுவரப்பட்ட 100 நடமாடும் நெல் களஞ்சியசாலைகள் காணாமல் போயுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்கதெரிவித்துள்ளார்.

இந்த நடமாடும் நெல் களஞ்சிய சாலையானது குண்டு துளைக்காத, தீயிட்டு அழிக்க முடியாத, வெட்டி அழிக்க முடியாத மிகவும் பாதுகாப்பான களஞ்சியசாலை என திஸாநாயக்க கூறியுள்ளார்.

விவசாய நிலங்களுக்கு அருகில் நடமாடும் களஞ்சியசாலைகள் வைககப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டதாகவும், அப்போது சமுர்த்தி வங்கி தலையிட்டு நெல்லை கொள்வனவு செய்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

ஒரு களஞ்சியசாலையில்500 தொன் நெல் சேமிக்க முடியும் எனவும் எஸ்.பி.திஸாநாயக்க கூறியுள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபை நலிவடைந்த சூழ்நிலையில்தான் சுசீச அபிவிருத்தி அமைச்சராக இருந்த போது தலையிட்டு தான் இந்தக் களஞ்சியசாலைகளை கொள்வனவு செய்ததாக எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் களஞ்சியசாலைகள் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் பராமரிப்பில் இருக்க வேண்டுமெனவும், ஆனால் அண்மைக்காலமாக களஞ்சியசாலைகளின் எந்தப் பாவனையையும் காண கிடைக்கவில்லை எனவும், அவற்றுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறிய வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

## பொதுமக்களுக்கு மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, டிச. 26

பெருந்தொகையான மக்களுக்கு பொருளாதார வளர்ச்சி பற்றிய தகவல்கள் கிடைக்காமை அவதானம் செலுத்த வேண்டிய பிரச்சினையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பல்வேறு நிதி மோசடிகள் குறித்து ஊடகவியலாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் இதனை கூறியுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"வெளிநாடுகளில் வட்டி வீதங்கள் 2 வீதமாக குறைந்துள்ளது. அந்த நாடுகளில் உள்ள சேமிப்பாளர்கள் வட்டி வருமானத்தின் அடிப்படையில் தமது அன்றாட தேவைகளை தீர்மானிப்பதில்லை.

பொருளாதாரம் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி எடுத்துள்ள பல்வேறு தீர்மானங்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளை மாத்திரம் பேசும் மக்களை சென்றடைவது குறைவாக உள்ளது. மேலும், கடவுச்சொல் மற்றும் ஓடிபி குறியீட்டை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதில் சிக்கல் உள்ளது.

அது குறித்து மக்கள் விழிப்புடன் இருப்பது அவசியம்" என்றார். (ஐ)

# பூநகரி கௌதாரி முனையில் மணல் அகழ்வதற்கான அனுமதி இரத்து




கிளிநொச்சி, டிசெ 26

கிளிநொச்சி - பூநகரி கௌதாரி முனையில் மணல் அகழ்வதற்கான அனுமதி இல்லாது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் அமைச்சர் சந்திரசேகரனால் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டமானது, மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் தற்போது இடம்பெற்று வருகிறது.

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் வடமாகாண ஆளுநர் வேதநாயகன் இணைத் தலைமையில் இன்று(26.12.2024) குறித்த கூட்டம் ஆரம்பமானது.

இந்த கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறிதரன், இராமநாதன் அர்ச்சுனா, ரஜீவன், இளங்குமரன், பவானந்தராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன், மற்றும் திணைக்கள தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது இராணுவத்தினர் வசமுள்ள காணிகள், மாவட்டத்தில் அதிகரித்துள்ள மதுபான சாலைகள், சட்ட விரோத மணல் அகழ்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# புங்குடுதீவு குற்றச்செயல்கள்: பொலிஸார் மீது மக்கள் அதிருப்தி



கொழும்பு, டிசெ 26

யாழ். புங்குடுதீவு சித்தி விநாயகர் மஹா வித்தியாலயத்திற்கு அருகாமையில் பல்வேறு குற்றச்செயல்கள் இடம்பெறுவதாக பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்கியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், "குறித்த பகுதியில் மாடுகளை திருடி இறைச்சிக்காக கொலை செய்தல், கசிப்பு உற்பத்தி மற்றும் வியாபாரம் என்பன இடம்பெறுகின்றன.

இது குறித்து குறிகட்டுவானில் இயங்கும் உப பொலிஸ் நிலையத்திற்கு பலதடவைகள் முறைப்பாடு செய்தும், அவர்கள் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை.

பொலிஸாருக்கும், குறித்த குற்றச் செயல்களை செய்பவர்களுக்கும் இடையே தொடர்புகள் காணப்படுகின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது.

மேலும், கசிப்பு வியாபாரத்தினால் மாணவர்களது கல்வி பாதிக்கப்படுவதுடன் பிள்ளைகளை தனியே பாடாசாலைக்கு அனுப்புவதற்கு பயமாக உள்ளது. அதுமாத்திரமன்றி, பெண்கள் வீதியில் தனியாக நடமாடுவதற்கு பாதுகாப்பற்ற நிலைமை காணப்படுகிறது. எனவே, இதற்கு உரிய அதிகாரிகள் ஒரு சிறந்த தீர்வு வழங்கு வேண்டும்" என கோரியுள்ளனர். (ஐ)

# எரிந்த வாகனத்திற்குள் சடலம்



*கொழும்பு, டிசெ 26*

*ஹபரண - பொலன்னறுவை பிரதான வீதிக்கு அருகில் எரிந்த கெப் ஒன்றிற்குள் இருந்து நபரொருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*மின்னேரிய வீதியில் பயணித்த நபர் ஒருவர், கெப் ஒன்று தீப்பிடித்து எரிவதாக பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து மின்னேரிய பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றுள்ளனர்.*

*நேற்று இரவு 10 மணியளவில் தீ பரவியதாகவும், இதன்போது கெப் ஹபரணையை நோக்கி செல்லும் வீதியில் நிறுத்தப்பட்டிருந்ததாகவும், அதில் வேறு யாரும் இருக்கவில்லை எனவும் மின்னேரிய பொலிஸார் தெரிவித்தனர்.*

*ஒருவரை கொலை செய்து அவரது சடலத்தை வாகனத்தில் வைத்து தீ வைத்து எரிப்பதற்காகவே கொண்டு வரப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.*

*மின்னேரியா பொலிஸாரும் பொலன்னறுவை மாநகரசபையின் தீயணைப்புத் திணைக்கள அதிகாரிகளும் தீயை முழுமையாக அணைத்தனர்.*

*தீப்பிடித்த கெப் வண்டி, கொழும்பு பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு சொந்தமானது என பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். (ஐ)*

# நவீன மயமாக்கப்படவுள்ள இலங்கைத் தபால் திணைக்களம்

கொழும்பு, டிசெ 26

இலங்கைத்தபால்திணைக்களத்தை, வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மறுசீரமைக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதன் பிரகாரம் தபால் சேவையானது, புதிய மாற்றங்களுடன் கூடிய நம்பகத்தன்மை மிக்க சேவையாக உருவாக் கப்படவுள்ளது.

இதற்கமைய, தபால் சேவை தொடர்பான எதிர்காலத்திட்டங்கள் குறைந்தபட்சம் அடுத்த 10 ஆண்டுகளை உள்ளடக்கிய வகையில் ஒழுங்கமைக்கப்படவுள்ளது.

அதேவேளை, வருமானம் ஈட்டக்கூடிய பலதுறைகளைதபால் திணைக்களம் கொண்டுள்ளது.

ஆகையால், தனியார் நிறுவனங்களுடன் போட்டியிடும் வகையில் திணைக்களத்தின் வருமான ஆதாரங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என் பதில் அரசாங்கம் கவனம் செலுத்தி யுள்ளது.

மேலும், தபால் சேவையில் உள்ள ஒரு சில துறைகள் தவற விடப்பட்டும், கவனத்தில் கொள்ளப்படாமலும் கிடப்பில் போடப்பட்டுள்ளதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

எனவே, எதிர்வரும் நாட்களில் தபால் சேவையை மக்கள் விரும்பத்தக்க வகையில் புதிய மாற்றங்களுடன் கூடிய பன்முக சேவைகளை வழங்குவதுடன், இலங்கைத் தபால் திணைக்களத்தின் வாடிக்கையாளர்களின் திருப்தியை கருத்தில் கொண்டு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புதிய மாற்றங்களுடன் கூடிய நம்பகத்தன்மையான தபால் சேவையை உருவாக்குவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது. (ஐ)

# வீதி சட்டங்களை மீறினோர் கைது

கொழும்பு, டிசெ 26

கடந்த 24 மணிநேரத்தில் வீதி சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் 8,747 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நத்தார் மற்றும் புதுவருடம் உள்ளிட்ட பண்டிகைக்காலத்தை முன்னிட்டு பொலிஸார், விசேட வீதி சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக மதுபோதையில் வாகனம் செலுத்திய 251 சாரதிகள் உட்பட, 8747 சாரதிகள் கடந்த 24 மணிநேரத்திற்குள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பொலிஸாரின் விசேட சோதனை நடவடிக்கை காரணமாக நாட்டில் எப்பாகத்திலும் பாரிய விபத்துக்கள் இடம்பெறவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் திணைக்களம் தெரிவித்தள்ளது.

இந்நிலையில், மதுபோதையில் வாகனத்தை செலுத்தாமல், வீதிச் சட்டத்திட்டங்களை முறையாக கடைப்பிடிக்குமாறும் பொலிஸ் திணைக்களம் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது. (ஐ)

# தமிழகம் முழுவதும் நாளை அ.தி.மு.க. கண்டன ஆர்ப்பாட்டம்

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு!

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதை கண்டித்து நாளை காலை 10.30 மணியளவில் மாவட்ட தலைநகரங்களில் கலெக்டர் அலுவலகங்களின் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அ.தி.முக. பொதுச் செயலாளரும் எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது சட்டம், ஒழுங்கை பாதுகாக்க தமிழக அரசு தவறி விட்டது. தி.மு.க. அரசு பொறுப்பேற்றது முதல் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது.

பெண்கள், சிறுமிகள், வயதானோர் வெளியில் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், சீண்டல்களை கட்டுப்படுத்த தவறிய தி.மு.க. அரசை கண்டித்து நாளை ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



## சென்னையில் ஏர்டெல் நிறுவன தொலைபேசி சேவை பாதிப்பு!




சென்னையில் சில பகுதிகளில் ஏர்டெல் தொலைபேசி சேவை ,ன்று காலையில் இருந்து பாதிக்கப்பட்டது. குறிப்பாக எழும்பூர், புரசைவாக்கம், வேப்பேரி பகுதியில் இந்த பிரச்சனை இருந்ததாக கூறப்படுகிறது.

ஏர்டெல் தொலைபேசிகள் செயல்படவில்லை எனவும் அழைத்தால் எதிர் முனையில் உள்ளவர்களுக்கு பேசுவது கேட்கவில்லை எனவும் ஒரு சில நேரங்களில் பேசுவது விட்டு விட்டு கேட்டது, டேட்டா செயல்பாடும்மெதுவாக ,ருந்தது என வாடிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர் .

ஏர்டெல்வாடிக்கையாளர்கள் பிற வலையமைப்பில் தொடர்பு கொண்டாலும் பேச முடியவில்லை. ஏர்டெல் வலையமைப்பில் உள்ள எண்களை தொடர்பு கொண்டாலும் வாடிக்கையாளர்கள் பெரும் சிரமத்துக்கு ஆளானார்கள்.

இதுகுறித்து ஏர்டெல் அலுவலகத்தில் கேட்டபோது, வலையமைப்பு மெதுவாக உள்ளது. அதனை சரிசெய்யும் பணி நடக்கிறது. விரைவில் சீராகிவிடும் என்றனர்.

## கோவையில் புத்தாண்டு கொண்டாட்டத்துக்கு பொலிஸார் கடும் கட்டுப்பாடு!



2025 புத்தாண்டிற்கு ,ன்னும் 5 நாட்களே உள்ள நிலையில் தமிழகத்தில் சென்னையை அடுத்து பெரிய நகரமான கோவையும் புத்தாண்டை வரவேற்க தயாராகி வருகிறது.

கோவை மாவட்டத்தில் உள்ள நட்சத்திர ஹோட்டல்கள் , விடுதிகள் மற்றும் ரிசார்ட்டுகளில் புத்தாண்டு கொண்டாட்டத்தை விமர்சையாக கொண்டாட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இன்னிசை கச்சேரி, சிறப்பு பாடகர்கள் வருகை, பபே உணவு முறை, வாணவேடிக்கை என பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான முன்பதிவும் தொடங்கி நடந்து வருகிறது.

கோவையில் ரேஸ்கோர்ஸ், வாலாங்குளம், உக்கடம் குளம் போன்ற ,டங்களில் அதிகளவில் மக்கள் திரண்டு புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவார்கள். ,தில் பெண்கள், சிறுவர், சிறுமிகள் என ஏராளமானோர் பங்கேற்பார்கள்.

இதே வேளை ,ளைஞர்கள் சமூக விரோத செயல்களில் ஈடுபட வாய்ப்புள்ளது. ,தனை தடுக்கும் விதமாக கோவையில் புத்தாண்டு அன்று இரவு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட உள்ளது. குறிப்பாக காந்திபுரம், உக்கடம் உள்ளிட்ட மேம்பாலங்களில் நள்ளிரவில் வாகனங்கள் செல்ல தடைவிதிக்கவும் பொலிஸார் ஆலோசித்து வருகிறார்கள். மேலும் புத்தாண்டு கொண்டாட்டத்தில் அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நிகழாமல் தடுக்கும் வகையில் விடுதிகளில் தீவிர சோதனையும் நடத்தப்படுகிறது. சந்தேக நபர்கள் யாராவது வந்து சென்றால் தகவல் தெரிவிக்குமாறு விடுதி ஊழியர்களிடம் பொல ிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதற்கிடையே சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் என்ஜினீயரிங் மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் மாநிலம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. ,தன்காரணமாக எப்போதும் ,ல்லாத வகையில் பாதுகாப்பை அதிகரிக்கவும், புத்தாண்டு கொண்டாட்டங்களில் கட்டுப்பாடு விதிக்கவும் பொலிஸார் முடிவு செய்துள்ளனர்.

இதுதொடர்பாக கோவை மாநகர பொலிஸ் உதவி கமிஷனர் அஜய் தங்கம் கூறியதாவது:-

புத்தாண்டுகொண்டாட்டம்என்பது அனைவராலும்கொண்டாடப்படக்கூடிய ஒன்று. அதில் எந்த மாற்றுக் கருத்தும் ,ல்லை. ஆனால் அதே வேளை அது எல்லை மீறுவதாக இருக்கக் கூடாது. பெரும்பாலும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ,ளம்வயதினர் நள்ளிரவு 12 மணி வரும்போது, உற்சாக மிகுதியில் புத்தாண்டை கொண்டாட முயல்வார்கள். நடுரோட்டில் வைத்து கேக் வெட்டி கொண்டாடுவது மற்றும் பைக் ரேஸ் போன்ற சாகச செயல்களில் ஈடுபட்டு, பொது மக்களுக்கு தொந்தரவை ஏற்படுத்துவதை அனுமதிக்க முடியாது. அவ்வாறு எல்லை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். குடிபோதையில் வாகனம் ஓட்டக்கூடாது. அதிவேகமாக வாகனங்களை இயக்கக் கூடாது. அனுமதி இல்லாமல் பொது இடத்தில் வைத்து புத்தாண்டு கொண்டாடக்கூடாது.

மேலும் சிலர் புத்தாண்டு கொண்டாட குடும்பத்துடன் வீட்டை பூட்டி விட்டு, வெளியே கோவில் மற்றும் பொது ,டங்களுக்கு சென்று மகிழ்வது உண்டு. அவ்வாறு வீட்டை பூட்டி விட்டு செல்லும்போது காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். விலை உயர்ந்த நகைகள் மற்றும் பணம் ஆகியவற்றை வீட்டில் வைத்து விட்டுச் செல்லக்கூடாது. நாமும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். பிறர்க்கும் தொந்தரவு கொடுக்காத நிலையில் புத்தாண்டை கொண்டாட வேண்டும். புத்தாண்டு கொண்டாட்டம் என்ற பெயரில் சட்டத்தை மீறுவதை காவல்துறை ஒருபோதும் அனுமதிக்காது.

கோவை மாநகர பொலிஸ் கமிஷனர் பாலகிருஷ்ணன் உத்தரவின் பேரில், அசம்பாவித செயல்களை தடுக்கும் பொருட்டு, அன்றைய தினம் நள்ளிரவு கோவை மாநகரம் முழுவதும் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது. எனவே பொதுமக்களின் அமைதியை சீர்குலைக்க முயல்பவர்கள், சட்டத்தின் முன் கடுமையான தண்டனைக்கு உள்ளாவார்கள்.

என அவர் ,தன்போது கூறினார்.

## FIRஐ பகிர்ந்தால் கடும் நடவடிக்கை– பொலிஸார் எச்சரிக்கை!



சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி ஒருவருக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமை சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இச்சம்பவத்திற்கு அரசியல் கட்சி தலைவர்கள் பலரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். மேலும் இச்சம்பவத்தை தொடர்ந்து தமிழ்நாடு அரசை கண்டித்து அதிமுக, பாஜக வினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே இச்சம்பவம் தொடர்பாக மாணவி அளித்த புகார் அடிப்படையில் பதிவு செய்த F.I.R. (முதல் தகவல் அறிக்கை) ,ன்று காலை வெளியானது. இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, பாதிக்கப்பட்ட மாணவி குறித்த விவரங்கள் அடங்கிய முதல் தகவல் அறிக்கையை வெளியே கசிய விட்டிருக்கிறார்கள். ஒரு பாலியல் வழக்கில், பாதிக்கப்பட்டவர்கள் குறித்த விவரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படைக் கடமையிலிருந்து தவறியிருக்கிறது திமுக. ,து தனிமனித உரிமைகளுக்கு எதிரானது மட்டுமின்றி, சட்டவிரோதச் செயல்பாடு என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை தொடர்பாக வெளியான கு.ஐ.சு. (முதல் தகவல் அறிக்கை) விவரங்களை காவல்துறை முடக்கி உள்ளது. மேலும் வழக்கு தொடர்பான கு.ஐ.சு.- ஐ பகிர்ந்தால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று காவல்துறை தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட மாணவியின் பெயர் உள்ளிட்ட விவரங்கள் ஒளிபரப்பப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டாலும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

## சம்பள உயர்வு கோரி திருப்பூர் அரசு வைத்தியசாலை தூய்மை பணியாளர்கள் 'திடீர்' போராட்டம்

திருப்பூர் அரசு மருத்துவ ப்பீட மருத்துவ மனையில் தனியார் நிறுவனங்கள் மூலம் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் ஏராளமானவர்கள் வேலை செய்து வருகிறார்கள். ,ந்த தொழிலாளர்களுக்கு தினக்கூலியாக மாவட்ட நிர்வாகம் ஒவ்வொரு தொகை வழங்க அறிவுறுத்தி உள்ளது.

அதன்படி அரசு மருத்துவப்பீட மருத்துவமனையில் வேலை செய்து வருகிற தூய்மை பணியாளர்கள் மற்றும் காவலாளிகள் ஆகியோருக்கு நாள் ஒன்றுக்கு தினக்கூலியாக ரூ.725 வழங்க வேண்டும். ஆனால் ரூ.534 மட்டுமே வழங்கப்படுவதாக தெரிகிறது.

,தனால்நிர்ணயித்த கூலியை வழங்க வேண்டும், ,.எஸ்.ஐ., பி.எப்., உள்ளிட்ட விவரங்களை தெரிவிக்க வேண்டும், 14 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டதை கண்டித்தும் ,ன்று காலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் -காவலாளிகள் உட்பட பலர் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.








# பார்வையைப் பாதிக்கும் செல்போன் பாவனை!

## குழந்தைகள் நலம் காப்போம்

நெதர்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், சீனா போன்ற நாடுகளில் குழந்தைகள் செல்போன்களை பயன்ப டுத்துவதற்கு கட்டுப்பாடுகள் வந்துவிட்டன. ஆனால்,இலங்கை,இந்தியா போன்ற நாடுகளில் தற்போதைக்கு எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லை. பிள்ளைகள் செல்போன்களை எந்தவித நேர அளவும் இல்லாமல் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போதெல்லாம் குழந்தைகள் மணிக்கணக்காய் செல்போன்ளில் மூழ்கிக் கிடக்கிறார்கள். இது ஆரோக்கியமானது கிடையாது. ஆனால், இந்த போதையில் இருந்து மீளமுடியாமல் அவர்கள் தத்தளிக்கிறார்கள். மதுவின் அடிமைத்தனத்தில் இருந்து விடுபடுவதற்காக எப்படி மறுவாழ்வு மையங்கள் இருக்கின்றனவோ அதைப்போன்று டிஜிட்டல் பயன்பாட்டு போதையிலிருந்து விடுபடுவதற்காக மறுவாழ்வு மையங்கள் வெளிநாடுகளில் இருக்கின்றன.குழந்தைகளிடையே மொபைல் பயன்பாடு கட்டுப்பாடுகள் குறித்த நடவடிக்கைகள் இலங்கையில் இதுவரையில் எதுவும் இல்லை.

ஒருவர் சராசரியாக நாளொன்றுக்கு 6 இலிருந்து 10 மணித்தியாலம் வரை மொபலில் மூழ்கி இருப்பதாக சொல்கிறார்கள். காலையில் இருந்து இரவு வரை 150 முறை செல்போனைப் பார்க்கிறார்களாம். இது இப்படியிருக்க, இன்னொருபுறம் அதிகப்படியான மொபைல் பயன்பாட்டினால் பிள்ளைகளிடையே கிட்டப்பார்வை குறைபாடும் வேகமாக அதிகரித்து வருகிறது என்பதையும் கவனித்தில் கொள்ள வேண்டும்.

இந்தக் குறைபாட்டினை கட்டுப்படுத்த ஐபோனில் தற்போது ஒரு புதிய வசதி செய்திருக்கிறார்கள். வழக்கமாக புத்தகம், நாளிதழ் போன்றவற்றை கையில் வைத்து பார்க்கும் தூரத்தைவிட செல்போனை கண்ணுக்கு மிக அருகில் வைத்துத்தான் பார்க்கிறோம். தொடர்ச்சியாக மொபைலை கண்ணுக்கு அரு கில் வைத்து நீண்டநேரம் பார்ப்பது கண்ணுக்கு களைப்பைத் தருவதுடன் நாளடைவில் கிட்டப்பார்வை குறைபாடு ஏற்படுவதற்கும் காரணமாகிவிடுகிறது. செல்போனை 20-25 சென்ரி மீற்றருக்குள் வைத்துப்பார்க்கும்போது கிட்டப்பார்வை ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகம்.

அமெரிக்க ஆப்டோமெட்ரி கழகம், குழந்தைகள் செல்போன், மடிக்கணனி போன்றவற்றை கண்ணிலிருந்து 33 சென்ரி மீற்றரில் இருந்து 50 சென்ரி மீற்றருக்குள் வைத்து பார்க்கும்படி அறிவுறுத்துகிறது. இந்த இடைவெளி ஒரு அடிக்கும் கூடுதலாக, அதாவது முழங்கை அளவுக்கும் கூடுதலாக இருக்க வேண்டும்.

அமெரிக்க ஆப்டோமெட்ரி கழகத்தின் வழிமுறைகளை பின்பற்றி தற்போது ஆப்பிள் நிறுவனம் ஐபோன் மற்றும் ஐபேடில் வெளியிட்டுள்ள ஐழுளு 17 ஓப்ரேட்டிங் சிஸ்டத்தில் புதிய வசதி ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில், திரை தூரத்திற்கான ( Screen Distance ) புதிய அம்சம் இடம்பெற்றுள்ளது. அதில் உள்ள 'ட்ரூ டெப்த்' கேமராவானது நாம் கண்ணிலிருந்து எவ்வளவு தொலைவில் போனை வைத்திருக்கிறோம் என்பதை கணக்கிடுகிறது. 20 சென்ரி மீற்றருக்கும் குறைவாக செல்போனை வைத்திருக்கும்போது போனை நகர்த்த அறிவுறுத்துகிறது.

இந்த புதிய அம்சம் சரியான பார்க்கும் தூரத்தை பராமரிக்க குழந்தைகளிடையே பழக்கப்படுத்த உதவுகிறது. 20 சென்ரி மீற்றருக்கும் குறைவான தூரத்தில் போனை வைத்திருக்கும்போது செல்போன் திரையில் அறிவிப்பு செய்து திரையை மறைக்கச் செய் கிறது. நீங்கள் போனை மிகக் குறைவான தூரத்தில் வைத்திருக்கிறீர்கள், இன்னும் தள்ளி வைத்து பார்ப்பது உங்கள் கண்களுக்கு நல்லது என்று நினைவூட்டுகிறது.

போனை சரியான தூரத்திற்கு தள்ளி வைத்தவுடன் திரையில் தொடருவதற்குரிய பொத்தான; (Continue button) தோன்றும். இதை அழுத்தியவுடன் தொடர்ந்து நாம் மொபைலை பார்க்க அனுமதிக்கிறது. இது ஓர் ஆரோக்கியமான கண்டுபிடிப்பே. இதில் உள்ள மிக முக்கியமான செய்தி, போனை குறிப்பிட்ட தொலைவுக்கு தள்ளி வைக்காமல் தொடர்ந்து போனை பார்க்க அனுமதிக்காது என்பதுதான்.



அனைவராலும் அப்பிள் சாதனங்களை வாங்க முடியுமா? குழந்தைகளின் கண்பார்வை நலன் கருதி இந்த வசதியை எளிமைப்படுத்தி அனைத்து வகை செல்போன்களிலும் ஏற்ப டுத்துவது குறித்து செல்போன் தயாரிப்பாளர்கள் கவனிக்க வேண்டும். முன்னணி செல்போன் தயாரிப்பு நிறுவனங்கள் இது குறித்து பரிசீலினை செய்தால், குழந்தைகள் வாழ்வு நலம் பெறும்.

# கிறிஸ்துமஸ் நாளில் ரஷ்யா தாக்குதல்: உக்ரைனுக்கு ஆயுதங்கள் கொடுப்போம்– ஜோபைடன்

ரஷ்யா -உக்ரைன் இடையேயான போர் இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து கொண்டிருக்கிறது. இதில் உக்ரைனுக்கு அமெரிக்கா, மேற்கத்திய நாடுகள் ஆதரவாக ஆயுதங்களை வழங்கி வருகிறது. இதில் அமெரிக்கா தொடர்ந்து உக்ரைனுக்கு ஆயுதங்களை அளிக்கிறது.

இதற்கிடையே கிறிஸ்து மஸ் நாளான நேற்று உக்ரைன் மீது ரஷ்யா தீவிர தாக்குதலை நடத்தியது. உக்ரைனின் எரிசக்தி கட்ட மைப்புகளை குறிவைத்து 78 ஏவுகணைகள், 106 டிரோன்கள் மூலம் ரஷ்ய படையினர் தாக்குதல் நடத்தினர்.

இதில் 59 ஏவுகணைகளையும் 54 டிரோ–ன்களையும் உக்ரைன் வான்பாதுகாப்பு ஏவுகணைகள் இடைமறித்து அழித்தன. 52 டிரோன்கள் மின்னணு ஆயுதங்கள் மூலம் செயலிழக்கச் செய்யப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்



இந்த நிலையில் இத்தாக்குதல் குறித்த ரஷ்யாவி–ற்கு அமெரிக்கா அதிபர் ஜோபைடன் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியதாவது:-

உக்ரைனில் ரஷ்யா நடத்திய ஏவுகணை தா–க்குதலை கண்டிக்கிறேன். குளிர்காலத்தில் உக்ரைன் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கும் சூழலில், மின்சாரத்தை துண்டிக்க தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நான் தெளிவாக சொல்கிறேன். உக்ரைன் மக்கள் அமைதியாகவும், பாதுகாப்பா–கவும் வாழ விரும்புகிறார்கள்.

ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக உக்ரைன் வெற்றி பெறும் வரை அமெரிக்காவும், சர்வதேச சமூகமும் உக்ரைனுடன் தொடர்ந்து நிற்க வேண்டும். உக்ரைனுக்கு அதிகமான ஆயுதங்கள் வழங்குமாறு பாதுகாப்பு துறைக்கு உத்தரவிட்டுள்ளேன். ரஷ்யாவின் படைகளுக்கு எதிராக, உக்ரைன் மக்களின் பாதுகா–ப்பை பலப்படுத்த வேண்டும் என்றார்.

# கனடா குடியுரிமை விதிமுறையில் மாற்றம்: இந்தியர்களுக்கு ஏற்படவிருக்கும் பாதிப்பு!




கனடாவில் ஏராளமான இந்தியர்கள் பணியாற்றியும், மேற்படிப்பு படித்தும் வருகி–றார்கள். அந்நாட்டில் நிரந்தர குடியுரிமை பெறுவதற்கு எக்ஸ்பிரஸ் என்ட்ரி என்ற நடைமுறை உள்ளது. இதில் அதிகளவில் இந்தியர்கள் விண்ணப்பிக்கிறார்கள்.

எக்ஸ்பிரஸ் என்ட்ரி முறையில் கனடா குடியுரிமை பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது, ஒவ்வொருவருக்கும் அவர்களது கல்வி, வேலை உள்ளிட்டவ–ற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும். அதிக மதிப்பெண்கள் பெ–றுபவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படும்.

கனடாவில் வேலை பார்ப்பதற்கான நிறுவனம் அளிக்கும் நியமன உத்தரவு கடிதத்துக்கு, 50 முதல் 200 புள்ளிகள் வரை கொடுக்கப்பட்டு வந்தது

இந்த நிலையில் கனடா குடியுரிமை விதிமுறையில் மாற்றம் செய்து அந நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி நியமன கடிதத்துக்கான மதிப்பெண்கள், இனி கணக்கில் எடுத்துக் கொள்ளப படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஏற்கனவே விண்ணப்பித்துள்ளோர் மற்றும் காத்திருப்போருக்கு பொருந்தாது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

போலி உத்தரவு கடிதங்கள் மூலம் பலர் விண்ணப்பிப்பதால், மோசடிகளை தடுக்க, பணி உத்தரவு கடிதங்களுக்கான மதிப்பெண்களை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை என்று முடிவு செய்–துள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த உத்தரவால் கனடாவில் தற்பே–ாது தற்காலிகமாக பணியாற்றும் மற்றும் பணியாற்றுவதற்கான பணி உத்தரவு பெற்றுள்ள இந்தியர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம்.

இதுகுறித்து கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர் மார்க் மில்லர் கூறுகையில் , ஹநமது பொருளாதாரத்திற்குத் தேவையான திறமையாளர்களை ஈர்க்கும் அதே வேளையில், மோசடியைக் குறைப்பதற்கு முக்கியமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

கனடாவின் வெற்றிக்கு குடியேற்றம் எப்போதுமே ஒரு மூலக்கல்லாக இருந்து வருகிறது. கனடாவிற்கு சிறந்த மற்றும் பிரகாசமானவற்றை வரவேற்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம், இதன் மூலம் அனைவருக்கும் தரமான வேலைகள், வீடுகள் மற்றும் அவர்கள் செழிக்கத் தேை–வயான ஆதரவைப் பெறலாம்' என்றார்.

# பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்த அமெரிக்க பாடகி!



உலக அளவில் கொண்டாடப்படும் மிகப்பெரிய பண்டிகைக–ளில் ஒன்று கிறிஸ்துமஸ். கிறிஸ்துமஸ் பண்டிகை உலகம்முழுவதும்நேற்று கோலாகலமாகக் கெ–ாண்டாடப்பட்டது.

கிறிஸ்துமஸ்பண்டிகை–கயை முன்னிட்டு இந்திய கத்தோலிக்க தேவாலய–த்தில் நடந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்றார்.

இந்நிலையில், ஆப்பிரிக்க–அமெ–ரிக்க பாடகியும், நடிகையுமான மேரி மில்பென் தனது வாழ்த்துகளை பிரதமர் மோடிக்கு தெரிவித்தார்.

இதுதொடர்பாக பாடகி மேரி மில்பென் எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், பிரதமர் மோடிக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பின் மிகப்பெரிய பரிசாகவும், அனைவருக்கும் எடுத்துக்காட்டாகவும் இயேசு கிறிஸ்து இருக்கிறார். கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் எனது ரட்சகராகிய கிறிஸ்துவை கௌரவம் செய்ததற்காக பிரதமர் மோடிக்கு நன்றி. கிறிஸ்துமஸ் தொடர்பாக நீங்கள் கூறிய வார்த்தை–தகள் எனது மனதை நெகிழ்வித்தன. இந்தியாவில் உள்ள என் சகோதர, சகோதரிகளுக்கு கிறிஸ்துமஸ் நல் வாழ்த்துகள் என பதிவிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து, பாடகி மேரி மில்பென்னுக்கு எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி பதிலளிக்கையில், கிறிஸ்துவின் போதனைகள் அன்பு, நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவத்தைப் போற்று கின்றன. இந்த உணர்வை வலுப்படுத்த நாம்அனைவரும்உழைக்க வேண்டியது அவசியம் என பதிவிட்டார்.

# இது ஒரு மனிதாபிமானமற்ற செயல்: ரஷ்யாவை சாடிய உக்ரைன் அதிபர்

*உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து இரு ஆண்டுகளைக் கடந்துள்ளது. இருதரப்பிலும் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.*

*உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஆயுதங்கள் மற்றும் நிதியுதவி அளித்து வருகின்றன.*

*இதற்கிடையே, உக்ரைனின் அனல்மின் நிலையங்கள் உள்பட எரிசக்தி கட்டமைப்புகள் நிறைந்த கார்கீவ் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளைக் குறிவைத்து ரஷ்ய படையினர் நேற்று தாக்குதல் நடத்தியது. டிரோன்கள் எனும் ஆளில்லா விமானங்க–ளால் தாக்குதல் நடத்தியது.*

*அனல்மின் நிலையங்களை குறிவைத்து ரஷ்ய படை தாக்குதல் நடத்தியதால் ஏராளமான நகரங்கள் இருளில் மூழ்கின.*



*இந்நிலையில், கிறிஸ்துமஸ் அன்று தாக்குதல் நடத்திய ரஷ்யாவுக்கு அதிபர் ஜெலன்ஸ்கி கண்டனம் தெரிவித்தார்.*

*இதுதொடர்பாக, அதிபர் ஜெலன்ஸ்கி சமூக வலைதள–த்தில் வெளியிட்டுள்ள செய்தியில், உலகம் முழுதும் கிறிஸ்–துமஸ் பண்டிகை கொண்டாடும் தருணத்தில் உக்ரைன்மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது.*

*உக்ரைனின் எரிசக்தி உட்கட்டமைப்புகள் நிறைந்த பகுதி–களைக் குறிவைத்து 70–க்கும் மேற்பட்ட ஏவுகணைகள், 100க்கும் மேற்பட்ட டிரோன்கள் வாயிலாக தாக்குதலை ரஷ்யா மேற்கொண்டுள்ளது. இதைவிட மனிதாபிமானமற்ற செயல் இருக்க முடியுமா என பதிவிட்டுள்ளார்.*

# கிழக்கில் 52 பேருக்கு ஆசிரியர் நியமனம்!











(திருகோணமலை, டிச. 26)

கிழக்கு மாகாண அரச ஆசிரியர் சேவை ஆட்சேர்ப்பின் கீழ் 52 ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர். ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் இன்று திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கே.குகநாதன், கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ், கிழக்கு மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஜே.லியாகத்தலி, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி.எஸ்.ஆர்.ஹசந்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு உரையாற்றிய ஆளுநர், 2024ஆம் ஆண்டு கிழக்கு மாகாண அரச ஆசிரியர் சேவைக்கான முதற்கட்ட ஆட்சேர்ப்பில் நியமனங்களை ஏற்காத மற்றும் சேவைக்கு சமூகமளிக்காதவர்களுக்கு பதிலாக இங்குள்ள 52 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் கடமைகளை சரியான முறையில், எதிர்கால சந்ததியினருக்கு திறம்பட பயன்படுத்தவும், திருப்திகரமான முறையில் சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வாழ்த்துகள் தெரிவித்தார்.

முதற்கட்ட ஆட்சேர்ப்பில் சேவைக்கு சமூகமளிக்காத, நியமனங்களை ஏற்காதவர்களுக்கு பதிலாக மொழி மூல அடிப்படையில் இந்த 52 பேரும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ஐ-08)

# தொடருந்து டிக்கெட்டுக்களில் அறிமுகமாகவுள்ள புதிய நடைமுறை

கொழும்பு, டிசெ 26

தற்போது பயன்படுத்தப்படும் தொடருந்து டிக்கெட்டுக்கு பதிலாக, பயணிகளுக்கு முன்பணம் செலுத்திய தொடருந்து டிக்கெட்டை அறிமுகப்படுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தொடருந்து திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவின் ஸ்மார்ட் ஸ்ரீலங்கா திட்டத்துடன் இணைந்து இலங்கை தொடருந்து திணைக்களத்தினால் இந்த திட்டம் நிர்வகிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் இந்தப் புதிய டிக்கெட்டை அறிமுகப்படுத்துவதற்கான பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், அதற்குத் தேவையான தொழில்நுட்பக் கருவிகள் பொருத்தப்பட்டு, உரிய ஸ்மார்ட் டிக்கெட்டுக்களை பயன்படுத்தும் பயணிகள் ஒவ்வொரு நிலையத்திலிருந்தும் தொடருந்தை அணுக முடியும் எனவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. அதேவேளை, குறித்த நவீன டிக்கெட்டுக்களை சரிபார்ப்பது தொடர்பான தொழில்நுட்ப அறிவும் பயிற்சி மூலம் தொடருந்து திணைக்கள அதிகாரிகளுக்கு அளிக்கப்பட உள்ளதாகவும் அத்திணைக்களம் கூறியுள்ளது. (ஐ)

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை கட்டாயக் காரணங்களுக்காக அன்றைய தினத்துக்கு முன்னர் நடைமுறைப்படுத்த வேண்டிய அதிகாரிகள் இருந்தால், மாகாணங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மூலம் அறிக்கை தயாரித்து பிரதி பொலிஸ் மா அதிபர் மனிதவள முகாமைத்துவ மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனப் பதில் பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், கடமைத் தேவைகளின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த உத்தரவு தடையாக இருக்காது எனப் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ-05)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி டிப்போவுக்கு பின்னால் உள்ள காணியின் இரண்டு ஏக்கர் நிலத்தை மாவட்ட செயலகத்தின் ஊடாக பெற்று, இராணுவ சின்னம் அகற்றப்பட்டு அதில் முன்னாள் அமைச்சர் சந்திரசேகரனின் பெயரில் ஒரு கலாச்சார மண்டபம் அமைக்கப்பட வேண்டும்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் இந்த நகரப் பகுதிக்குள் இவ்வாறு காணிகள் இராணுவத்துக்குத் தேவையில்லை என்றார்.

அதற்கு பதிலளித்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், கடற்றொழில் நீரியல் வள அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர், காணி உரிமை கோருபவர்களது மத்தியில் பல்வேறு குளறுபடிகள் இருக்கின்றது. கிராம சேவகர்கள் உண்மையான காணி உரிமையாளர்களை கண்டுபிடித்துத் தர வேண்டும் என்றார். (ஐ)

## கிளிநொச்சியிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் உட்பட அரசாங்க அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது, நாடாளுமன்ற உறுபபினர், மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கும், இலங்கை பனை அபிவிருத்தி சபையின் தலைவர் சகாதேவனுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதால் கடும் அமைதியின்மை நிலவியது. வழக்கத்துக்கு மாறாக அரசாங்க அதிகாரிகளுடன் அமைதியான முறையில் செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், மருத்துவர் அர்ச்சுனா இம்முறை நாகரிகமான முறையில் நடந்து கொண்டார்.

எனினும், இலங்கை பனை அபிவிருத்தி சபையின் தலைவர் சகாதேவனின் செயற்பாடுகள் குறித்துக் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட வேளையில், நாடாளுமன்ற உறுப்பினரைப் பார்த்து பனை அபிவிருத்தி சபைத் தலைவர் சகாதேவன், “நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் போல இல்லாமல் நீங்கள் ஏன் பைத்தியக்காரத்தனமாக பேசுகின்றீர்கள்” என்று கேட்ட போது மட்டும் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா “சட் அப்” எனச் சடுதியாகச் சொன்னதனால் சிறு சலசலப்பு ஏற்றபட்டது. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துடன் சம்பந்தமேயில்லாத ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராகப் பேசியமையும் பெரும் விமர்சனத்துக்குள்ளா கியது.

கூட்ட நடைமுறைகளை வழிப்படுத்துவதில் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரின் கட்டுப்பாட்டை மீறிப்பலர் செயற்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

(ஐ)

# ஆழிப் பேரலை அவலத்தின் ஆறாத்துயரில் 20 ஆண்டுகள்!




























யாழ்ப்பாணம், டிச. 26

2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலையில் கொல்லப்பட்வர்களின் 20 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் நாடெங்கிலும் பரவலாக இடம்பெற்றுள்ளன. தேசிய ரீதியாகப் பிரதான நிகழ்வு காலி பெரலிய சுனாமி நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

இலங்கையில் சுனாமி அனர்த்தத்தின் காரணமாக 35 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியானதுடன் 5,000 க்கும் அதிகமா னோர் காணாமல் போயினர். அதனை நினைவு கூரும் வகையிலும், நாட்டில் ஏற்பட்ட பல்வேறு அனர்த்தங்களினால் உயிரிழந்த அனைவரையும் நினைவுகூரும் வகையிலும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் இன்றைய நாளை தேசிய பாது காப்பு தினமாகப் பிரகடனப்படுத்தியிருந்தது.

அனர்த்தங்களினால் உயிரிழந்த மக்களை நினைவு கூறும் வகையில் இன்று காலை 9.25 முதல் 9.27 வரை இரண்டு நிமிட மௌன அஞ்சலி நிகழ்வு நடெங்கிலும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம்- உடுத்துறையில் அமைந்துள்ள சுனாமிப் பொது நினைவாலயத்தில் உறவுகளைப் பறிகொடுத்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கூடித் தம் உறவுகளைக் கண்ணீர்மல்கக் கசிந்துருகி நினைவு கூர்ந்தனர். (ஐ-09)







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.12.2024 இல் வெளியிடப்பெற்றது.